**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8030868

1. District மாவட்டம் : Chennai  PS காவல்நிலையம்: Chennai City III  Year ஆண்டு:  FIR No. மு.த.அ. எண்: 4/AC/2018/CC-III  Date நாள்: 30.07.2018

2. (i) Act சட்டம்: IPC  Sections பிரிவுகள்: 420 IPC
   (ii) Act சட்டம்: prevention of Corruption Act 1988  Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)(d) of PC Act 1988
   (iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from நாள் முதல் : 24.05.2009  Date to நாள் வரை : 23.10.2013
   Time Period நேர அளவு :  Time from நேரம் முதல் :  Time to நேரம் வரை :
   (b) Information Received at PS. Date காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் : 30.07.2018  Time நேரம் : 14.00 Hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 30.07.2018  Time நேரம் : 14.00 Hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Detailed Enquiry

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் Guindy, Chennai about 5KM North East
   Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. R. Muthuraj  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr. Rathinapandy
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 33/2018  (d) Nationality : நாட்டினம் INDIAN  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் —  (g) Address : முகவரி NO: 3/2, 2nd street, Bakthavachalam Nagar, Vanganallur, Chennai-114

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) Tr. K. Gunasekaran, Junior Employment Officer, Directorate of Employment and Training, Thiru. Vi. ka Industrial Estate, Guindy, Chennai.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   Due to Detailed Enquiry DE 84/2017/E&T/CC-III

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Attach separate sheets

13. Action taken : Since the above report reveals commission of offence(s)-u/s as mentioned at item No.2 registered the c
and took up the investigation / directed [illegible] Rank [illegible] to take up the Investigation / Refu
Investigation / transferred to PS V&AC, C.C.-I, Chennai on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வ
பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ..................... ந
பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்
................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complaina
Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏ
கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M. Visvakhumar 30.7.18

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Stati
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
30.07.2018

Name: பெயர் M. VISVAKHUMAR
Rank: நிலை Inspector of Police No. எண் .......
CC.III, V&AC, Ch.16.

**<u>Chennai V&AC, Chennai City-III Cr.No.04/AC/2018/CC-III FIR continuation (Column -12):-</u>**

Today on 30.07.2018 at 14.00 Hrs when I was in my office, as per the instruction of Directorate of Vigilance and Anti-Corruption, Chennai, case was registered in Chennai V&AC, Chennai City-III, Cr.No.04/AC/2018/CC-III, u/s. 420 IPC and 13(2) r/w 13(1)(d) of Prevention of Corruption Act 1988. The detail of the case runs as follows:- Based upon the complaint received from Tr.R.Muthuraj, M.A-33/2018, S/o Tr.M.Rathinapandy, No. 3/2, 11th Street, B.V.Nagar, Nunganallur, Chennai – 114, dated 09.02.2017 which has been forwarded by the Secretary to Government, Labour and Employment Department, Secretariat, Chennai-9 to the Directorate of Vigilance and Anti-Corruption, the DVAC ordered a Detailed Enquiry to enquire into the allegations in the complaint vide DE 84/2017/E&T/CC-III, dated 09.08.2017 against Tr.K.Gunasekaran who was formerly working as Junior Employment Officer, Directorate of Employment and Training, Thiru Vi.Ka.Industrial Estate, Alandur Road, Guindy, Chennai is a public servant u/s 2 (c) of Prevention of Corruption Act 1988, Chennai from 02.03.2015 to 28.07.2017 during the relevant period of occurrence and DE was registered on 24.08.2017. The said complaint which is part and parcel of this First Information Report is as follows: <u>பதிவுத் தபால் ஒப்புதல் சீட்டுடன் வேலை வாங்கித்தர பணம் வாங்கி ஏமாற்றியது புகார் விண்ணப்பம்.</u> நாள் : 09.02.2017, அனுப்புநர், R.முத்துராஜ், M.Sc., த/பெ.ரத்தினபாண்டி, எண்.3/2, 2-வது தெரு, பக்தவச்சலம் நகர், நங்கநல்லூர், சென்னை - 600 114. பெறுநர், அரசுச் செயலர் அவர்கள், தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, தலைமைச் செயலகம், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை - 600 009. ஐயா அவர்களுக்கு, பொருள் : உடல் ஊனமுற்ற மாற்றுத் திறனாளியாகிய என்னிடம் அரசாங்க வேலை வாங்கித் தருவதாகக் கூறி கிண்டி, சென்னை-32, வேலைவாய்ப்பு அலுவலக இளநிலை வேலை வாய்ப்பு அதிகாரி திரு.K.குணசேகரன், M.A.,அவர்கள் ரூ.5,60,000/- (ரூபாய் ஐந்து இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) என்னிடம் மூன்று தவணைகளில் வாங்கிக் கொண்டு வேலை வாங்கித் தராமல் என்னை ஏமாற்றி மோசடி செய்துள்ளார். அவர்மீது நடவடிக்கை எடுக்கவும், அவரிடமிருந்து பணத்தை பெற்றுத் தருமாறும் கோரி மாற்றுத்திறனாளியாகிய நான் புகார் விண்ணப்பம் சமர்ப்பித்தல். நான் உடல் ஊனமுற்ற மாற்றுத்திறனாளியாவேன். (குழந்தை பருவத்தில் போலியோ நோய் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளி). நானும் எனது வயது முதிர்ந்த தாயாரும் மேற்கண்ட முகவரியில் குடியிருக்கின்றோம். தகப்பனார் இல்லாத

சூழலிலும், எனது தாயார் குடும்பம் நடத்திட வழியில்லா வறிய நிலையிலும், ஏழ்மை நிலையிலும் இருந்து வந்த போதிலும், என்னை நல்ல நிலைக்கு கொண்டு வந்திட வேண்டுமென்ற கொள்கையுடன் விடா மன உறுதியோடும், தன்னம்பிக்கையோடும் கடும் முயற்சியோடும் கஷ்டப்பட்டு, என்னை M.Sc., (IT) முதுகலை அறிவியல் தகவல் தொழில்நுட்பம் படிக்க வைத்தார்கள். அவர்களின் ஆசையை நிறைவேற்றிட நானும் படித்து முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றுவிட்டேன். அத்தோடு தட்டச்சு ஆங்கிலம் கீழ்நிலையும் தேர்ச்சி பெற்று சான்றிதழ் வாங்கிவிட்டேன். எனது இளங்கலை அறிவியல் பட்ட படிப்பு சான்றிதழ்களை காஞ்சிபுரம் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பின்வருமாறு பதிவு செய்து தொடர்ந்து புதுப்பித்தல் செய்து வருகிறேன். அவை பின்வருமாறு : பதிவு எண்.K.P.D/2002/M00002911, பதிவு நாள் 11.06.2002, SSLC X01.10-SF 11.06.02, +2 X01.15 SF dt. 21.06.04, Degree X01.40 SF dt. 05.03.2008. இந்நிலையில், நான் உடல் ஊனமுற்ற மாற்றுத்திறனாளி என்று சிறப்பு தகுதியையும் குறிப்பிட்டு பதிவு செய்துள்ளேன். இதனால், எனக்கு விரைவில் வேலை கிடைத்துவிடும் என்று மிகுந்த நம்பிக்கையில் காத்திருந்தேன். கடந்த 2009 ஆம் ஆண்டில் எனது தாய்மாமாவுக்கு வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பணிபுரியும் திரு.K.குணசேகரன் என்பவர் அறிமுகமானார். அவரிடம், எனக்கு வேலை வாய்ப்பு உதவி கிடைக்க ஆலோசனை கேட்கச் சென்றார். அப்போது திரு.K.குணசேகரன் அவர்கள் என் தாய்மாமாவிடம் "முன்பு மாதிரி அவ்வளவு ஈஸியாக இண்டர்வியூ கிடைக்காது. யாராவது ரெக்கமெண்ட்டேஷன் செய்தால்தான் வேலை வாய்ப்பு அதிகாரி இண்டர்வியூ போடுவார்" என்றார். அதற்கு என் தாய் மாமா "சார் உங்களால் முடிந்தால் உதவி செய்யுங்கள்" என்றார். அதற்கு அவர் "இரண்டு தினங்கள் கழித்து வந்து என்னை பாருங்கள்" என்று கூறினார். இரண்டு நாட்கள் கழித்து நானும், என் தாய் மாமாவும் மீண்டும் திரு.K.குணசேகரன் சார் அவர்களை ஒரு அலுவல் வேலை நாளில் மாலை 5.30 மணி அளவில் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் போய்ப் பார்த்தோம். அவர் வெளியே வந்து எங்களுடன் ஒரு டீக்கடையில் டீ சாப்பிட்டுவிட்டு "இண்டர்வியூ மட்டும் வேண்டுமா? அல்லது posting-ங்கும் சேர்த்து வேண்டுமா?" என்று வினவினார். நாங்கள் அவரிடம் ஒன்றும் பேசாமல் நின்றோம். அவர் குறுக்கிட்டு "இந்தாப்பா போஸ்ட்டிங்னா 5 முதல் 6 லட்சம் வரை ஆகும். பணத்துடன் வந்தால் செஞ்சித்தருவேன். நான் அரசாங்கத்தில ரொம்ப பேர்களை வேலையில் வைச்சிருக்கேன். அவங்கல்லாம்

ரூபாய் கொடுத்த பின்புதான் வேலைக்கான இண்டர்வியூ மற்றும் போஸ்ட்டிங்கிற்கான முயற்சியை ஸ்பீடா செஞ்சி கொடுத்திருக்கேன். உங்களுக்கு வேணும்னா முதல்ல 10 ஆயிரம் ரூபாய் டோக்கன் அட்வான்ஸ் கொடுத்துருங்க. நான் எங்க அதிகாரிகிட்ட பேசிட்டு பேலன்ஸ் தொகை எவ்வளவுன்னு சொல்றேன்" என்று சொல்லிவிட்டார். பிறகு ஒருநாள் திரு.K.குணசேகரன் சார் அவர்களே போன் செய்து, "இப்பவே இண்டர்வியூ ரெடியா இருக்கு. உடனடியாக 10 ஆயிரம் ரூபாய் எடுத்துக் கொண்டு எம்ப்ளாய்மெண்ட் ஆபிஸுக்கு வா" என்று சொன்னார். உடனே நானும், என் தாய்மாமாவும் ரூ.10,000/- எடுத்துக்கொண்டு சென்னை, அடையாறு வேலை வாய்ப்பு அலுவலகத்திற்கு 24.05.2009 அன்று மாலை 5.30 மணி அளவில் போய் திரு.K.குணசேகரன் சார் அவர்களை என் தாய்மாமா போய் பார்த்தார். அவர் "பக்கத்திலுள்ள ஒரு ஓட்டலில் வெயிட் பண்ணு. இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்துடறேன்" என்றார். நாங்கள் காத்திருந்தோம். திரு.K.குணசேகரன் சார் அங்கு வந்தார். எங்களிடம் இண்டர்வியூ ரெடியா இருக்கு. எம்ப்ளாய்மெண்ட் ஆபீஸரிடம் பேசி, முடிச்சிட்டேன்னு சொல்லிட்டு ரூ.10,000/-மும் எம்ப்ளாய்மெண்ட் கார்டு ஜெராக்ஸும் என்னிடமிருந்து வாங்கிக் கொண்டார். அப்போது "சார் இண்டர்வியூ என்ன போஸ்ட்டுக்கு சார்" என்று நாங்கள் கேட்டபோது "அதெல்லாம் இப்ப உடனே சொல்ல முடியாது" என்று சொல்லிவிட்டார். சில மாதங்கள் கடந்த பின்னர் திரு.K.குணசேகரன் சார் எங்களுக்கு போன் செய்து, "செங்கற்பட்டு மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் Xerox Operator போஸ்ட்டிங் ரெடியா இருக்கு. அதுக்கு ஒரு ட்ரெயினிங் எடுத்து சர்ட்டிபிகேட் ரெடி பண்ணணும். அப்பத்தான் நீ இண்டர்வியூ அப்பியர் ஆகி, போஸ்ட்டிங் அங்க வாங்கித் தர முடியும்" என்று சொன்னார். மேலும், "அதற்கு ரூ.2,50,000/- (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) எடுத்துக்கிட்டு வா" என்று சொல்லிவிட்டு போனை வைத்துவிட்டார். நாங்கள் வட்டிக்கு பணம் கடன் வாங்கி, ரூ.2,50,000/- (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) எடுத்துக் கொண்டு திரு.K.குணசேகரன் சார் வேலை பார்க்கும் எம்ப்ளாய்மெண்ட் ஆபீஸுக்கு 24.08.2009 அன்று திங்கட்கிழமை மாலை 5.30 மணியளவில் வேலை முடித்து சென்றபோது அவர் (K.குணசேகரன்) எங்களிடமிருந்து ரூ.2,50,000/-த்தை வாங்கிக் கொண்டார். அப்போது Xerox Operator ட்ரெயினிங் முடித்ததுபோல சான்றிதழ் ஒன்றை என்னிடம் கொடுத்தார். "இதில் உள்ளபடி இண்டர்வியூ கேட்டா சொல்லனும்" என்று சொன்னார். பலமுறை

இண்டர்வியூ குறித்து திரு.K.குணசேகரன் சார் அவர்களிடம் நான் கேட்டுக்கொண்டே இருந்தேன். அதற்கு அவர் வந்துவிடும் என்றுதான் பதில் சொல்லிக்கொண்டே இருந்தார். நானும் நம்பிக்கையோடு இருந்தேன். ஆனால் இண்டர்வியூவிற்கு கார்டு வரவில்லை. நான் போன் செய்து கேட்டால் “போஸ்ட்டிங் போடுறதுல டிலேயாகும்” என்று சொல்வார். “சீக்கிரமா போஸ்ட்டிங் ஆர்டர் வந்திடும்” என்று சொல்லிக்கொண்டே இருந்தார். நானும் மிகுந்த நம்பிக்கையோடு காத்திருந்தேன். பின்பு திடீரென்று திரு.K.குணசேகரன் சார் அவர்கள் 2010 ஆம் ஆண்டில் எனக்கு போன் செய்து “TNPSC குரூப் 2-க்கு அப்ளிகேஷன் போடு. பரீட்சை எழுது. நமக்கு TNPSC போர்டு மெம்பர் செகரட்டரிகிட்ட ஆளு இருக்கு. இந்த முறை நிச்சயமா உனக்கு போஸ்டிங் வாங்கிக் கொடுத்துடறேன்” என்று உறுதியாக சொன்னார். நானோ அவரிடம் “இதோ, அதோன்னு ஒவ்வொன்னா சொல்றீங்க. ஆனால் எதுவுமே இன்னிக்கு வரைக்கும் நடக்கலையே சார்” என்று கூறியபோது, அவர் "நான் என்னப்பா பண்றது. எல்லா முயற்சியையும் சரியாத்தான் எடுக்கறேன். ஆனா அது என்னவோ மிஸ் ஆயிக்கிட்டே வருது. நீ கவலைப்படாதே. இந்த முறை நல்லபடியா முடிச்சு தந்திடறேன்” என்று உறுதி அளித்தார். அதற்கு நான் அவரிடம் சார் இதுவரை 2,60,000/- கொடுத்துட்டேன். இன்னும் ஒண்ணுமே முடியல என்று சொன்னேன். “கவலைப்படாதே முடித்துத் தருகிறேன்” என்று சொன்னார். ஒருநாள் எனக்கு திரு.K.குணசேகரன் சார் போன் செய்து “TNPSC மெம்பர் செகரட்டரிகிட்ட உள்ள ஆளுகிட்ட போய் எல்லாம் பேசி முடிச்சாச்சு. அவருக்கு ஒரு லட்சம் ரூபாய் கொடுத்துட்டோம்னா டெபனட்டா போஸ்டிங் உறுதி” என்று என்னிடம் சொல்லிவிட்டு, “ஒரு லட்சம் ரூபாய் எடுத்துக்கொண்டு உடனே வா” என்று அழைத்தார். அதனை நானும் நம்பியதோடு, TNPSC மூலமா இல்ல போஸ்ட்டிங் கிடைக்கிறது என்று ஆசைப்பட்டு, ஒரு லட்சம் ரூபாய் பணத்தினை புரட்டி எடுத்துக்கொண்டு திரு.K.குணசேகரன் சார் பணிபுரியும் எம்ப்ளாய்மெண்ட் ஆபீஸுக்கு போன் செய்து “எங்கே வரணும்” என்று கேட்டபோது, அவர் “என் வீட்டுக்கே வா” என்றார். கடந்த 05.04.2012 அன்று வியாழக்கிழமை இரவு 8.30 மணியளவில் சென்னை - 600 118, கொடுங்கையூர், முத்தமிழ் நகரிலுள்ள திரு.K.குணசேகரன் சார் வீட்டிற்கு போய் ஏற்கனவே கொடுத்த ரூ.2,60,000/- போக கூடுதலாக ரூ,1,00,000/- (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) என்னிடமிருந்து வாங்கிக்கொண்டார். இதைத் தொடர்ந்து அவ்வப்போது போன் மூலமாக

திரு.K.குணசேகரன் சாரிடம் தொடர்ந்து போஸ்ட்டிங் சம்பந்தமாக கேட்பேன். அதற்கு அவர் “இதோ வந்துடும்” என்று சொல்வார். நாட்கள் செல்லச்செல்ல எனக்கு பயமும், குடும்பத்தில் உள்ள என் தாயாருக்கு பிரச்சனையும் ஏற்பட்டன. எனக்கு மனக் குழப்பமும் ஏற்பட்டது. இந்நிலையில் திடீரென திரு.K.குணசேகரன் சார் எனக்கு போன் செய்து “TNPSC போர்டு மெம்பர்கள் ரொம்ப கெடுபிடியா இருக்காங்க. அதனாலதான் போஸ்ட்டிங் டிலேயாகுது” என்று சொல்ல ஆரம்பித்தார். அவர் சொல்வதை நானும் நம்பிக்கொண்டே இருந்து வந்தேன். பின்பு ஒருநாள் எனக்கு போன் செய்து “TNPSC ஆபீஸ்ல மெம்பர் செகரட்டரி நம்ப ஆளு வந்திட்டாரு. அவர்கிட்ட எல்லாத்தையும் விவரமா பேசி முடிச்சிட்டு வந்துட்டேன். அவர் நிச்சயம் குரூப் IV போஸ்டிங்கில எந்தப் பிரச்சனையும் இல்லாம ஈஸியா போட்டு தருவதாக சொல்லிட்டாரு. நீ ஏற்கனவே கொடுத்த ரூ.3,60,000/-த்தில (ரூபாய் மூன்று இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) ரூ.3,00,000/-த்தை மட்டும் அந்த அதிகாரிகிட்ட கொடுத்துதான்பேசி முடிச்சிட்டிருக்கேன். அவர் இன்னும் இரண்டு லட்சம் ரூபாய் உடனடியாக கேட்கிறார். உடனே கொண்டுவா என்று என்னிடம் சொல்லிட்டாரு” என்று என்னிடம் சொன்னார். திரு.K.குணசேகரன் சார் எம்ப்ளாய்மெண்ட் ஆபீஸில் வேலை பார்க்கின்றார் என்பதால் நான் முழுமையாகவே அவர் சொல்வதை நம்பி, கடந்த 23.10.2013 அன்று புதன்கிழமை மாலை 7.35 மணியளவில் மேற்கொண்டு ரூ.2,00,000/- (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்)-த்தை அவருடைய வீட்டிற்குச் சென்று கொடுத்தேன். திரு.K.குணசேகரன் சார் வேலைவாய்ப்பு அதிகாரி கூறியதற்கிணங்க 2014 ஆம் ஆண்டில் குரூப் IV தேர்வு எழுதினேன். தேர்வில் தேர்ச்சி பெற்றோர் விவரம் TNPSC-ல் வெளியிடப்பட்டது. அதில் எனது பெயர் இருந்தது. இந்த விவரத்தை நான் உடனடியாக அவரிடம் தொலைபேசியில் சொன்னேன். அதற்கு அவர் திரு.K.குணசேகரன், Employment Officer) “நான்தான் தேர்ச்சி பெற எல்லா ஏற்பாடுகளையுமே செய்திருக்கிறேன்” என்றார். அவரிடம் “போஸ்ட்டிங் ஆர்டர் எப்ப சார் வரும்” என்று கேட்டதற்கு “வெகு விரைவில் வந்துவிடும், காத்திரு” என்றார். நானும் அவர் (K.குணசேகரன், Employment Officer) கூறியபடி பல காலம் காத்திருந்தேன். நல்ல செய்தி எனக்கு அவரிடமிருந்து கிடைக்கவில்லை. பிறகு திடீரென்று 2016 பிப்ரவரி மாதத்தில் அவர் போன் செய்து “கால்நடைத்துறையில் வெட்னரி இன்ஸ்பெக்டர் பதவிக்கு ஆள் எடுக்கிறார்கள். அதில் நிச்சயம் வேலை

ஆர்டர் வாங்கிக் கொடுத்துவிடுவேன்" என்றார். அப்போது அவரிடம் "சார் TNPSC குரூப் II மற்றும் IV போஸ்ட்டிங் என்ன ஆச்சு?" என்று கேட்டேன். "அது தாமதம் ஆவதால் இன் த மீன் டைம் கால்நடைத்துறைக்கும் ஒரு ட்ரெய் பண்ணி வைக்கலாமேன்னுதான் சொன்னேன்" என்றார். நானும் அவர் சொல்வதை மேலும், மேலும் நம்பியே இருந்து கொண்டிருந்தேன். ஆனால், எனக்கு அவரால் (திரு.K.குணசேகரன், Employment Officer) எந்த அரசுப்பணியும் கிடைக்கவில்லை. காசு கொடுத்து ஏமாந்ததுதான் மிச்சம் என்ற நிலைக்கு வந்துவிட்டேன். விரக்தியின் உச்சத்தில்தான் கடைசியாக பல ஆண்டுகள் என்னை ஏமாற்றியதால் கோபப்பட்டு வாங்கிய பணத்தை தந்துவிடும்படி அவரிடம் பேசினேன். அவர் (திரு.K.குணசேகரன்) என்னிடம் "உன்னிடம் வாங்கிய பணம் எல்லாத்தையும் அந்த அதிகாரியிடம்தான் கொடுத்துவிட்டேன். அவர்களிடம்தான் பேசி அவர்கள் கொடுத்தபின்புதான் தருவேன்" என்றார். அவரது சொல்லில் உண்மையில்லை என்பதை உறுதி செய்து, அவர் (K.குணசேகரன், Employment Officer) பணிபுரியும் கிண்டி, சென்னை-600 032, வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு போய் பணத்தை திருப்பித் தரும்படி கேட்டபோது, "விரைவில் பணம் ரெடி பண்ணிட்டு போன் செய்கிறேன்" என்றார். அவர் கூறியபடி எனக்கு ஒருநாள் போன் செய்து, சென்னை, சைதாப்பேட்டை கலைஞர் ஆர்ச் முன்பு நிற்கும்படி சொன்னார். சரியாக 05.04.2016 அன்று மாலை 6.15 மணிக்கு அங்கு வந்தார் திரு.K.குணசேகரன். அப்போது என்னிடம் ஒரு இலட்சம் ரூபாய் அடங்கிய இரண்டு 500 ரூபாய் கட்டுகளை கொடுத்தார். மீதிப்பணம் பற்றி அப்போது அவரிடம் கேட்டதற்கு, "போன் பண்ணியெல்லாம் நீ கேட்கக்கூடாது. பணம் வந்ததும் நானே உனக்கு போன் செய்து கூப்பிடுவேன். அப்ப வந்து வாங்கிக்கோ" என்று கூறிவிட்டு பைக்கில் சென்றுவிட்டார். இதுவரை மீதி பணத்தை அவர் எனக்கு கொடுக்கவில்லை. ஆபீஸிற்கு போய் கேட்டால் "இருப்பா கொடுத்த இடத்துல இருந்து பணம் வரலை. வந்ததும் தரேன்" என்று சொல்லி அனுப்பிவிடுவார். இதுபோல் பலமுறை அனுப்பியுள்ளார். ஆபிஸில் இவரைப்பற்றி விசாரித்தபோது, திரு.K.குணசேகரன், Employment Officer இன்னும் ஆறு மாதத்தில் ரிட்டையர் ஆகப் போகிறார் என்று கேள்விப்பட்டேன். எனவே, பெருமதிப்பிற்குரிய ஐயா அவர்கள், இந்த மாற்றுத்திறனாளி மீது பரிதாபம் கொண்டு, கருணை கொண்டு, தகப்பனார் இல்லாமல், தாயார் துணையோடு வாழும் இந்த ஏழை மாற்றுத்திறனாளியை

ஏமாற்றிய திரு.K.குணசேகரன், இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர், கிண்டி தலைமை வேலைவாய்ப்புத்துறை அலுவலகம், சென்னை - 600 032, அவர்கள் மீது தக்க துறை ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். மேலும், என்னிடமிருந்து அந்த அலுவலர் (K.குணசேகரன்) வாங்கிய ரூ.5,60,000/- (ரூபாய் ஐந்து இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) எனக்கு திரும்பப் பெற்றுத் தருமாறு தங்கள் பொற்பாதம் தொட்டு வேண்டுகிறேன். தங்கள் உண்மையுள்ள, sd.xxxxx(R.முத்துராஜ்),

Based upon the said complaint a Detailed Enquiry was conducted and based on the outcome of DE, the Directorate issued the direction to register the FIR by vide Memorandum No. DE 84/2017/E&T/CC-III, dated. 30.07.2018. On receipt of the memorandum, a Case in Vigilance and Anti-Corruption, Chennai City-III Detachment in Cr.No.04/2018/AC/CC-III U/s 420 IPC and 13(2) r/w 13(1) (d) of the Prevention of Corruption Act, 1988 is registered on 30.07.2018 at 14.00 hrs.

The original FIR is submitted to the Hon'ble Special Judge for cases under the Prevention of Corruption Act, 1988, Chennai and other copies were submitted to officers concerned.

M.Visvakhumar 30.7.18

M.Visvakhumar,
Inspector of Police,
Chennai City-III Detachment,
V&AC, Alandur, Chennai-16.